T. M. Swaminathan

உ

கணபதி துணை.

# ஆதிசைவகுல மான்மியம்.

இஃது

தேவிகோட்டை

## ஸ்ரீ வன்றொண்டரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று


காரைக்குடி

"ஞானம்பிகா" பிரின்டிங் வொர்க்ஸில்

அச்சிடப்பெற்றது

பிங்கள௵ தைமீ

1918.

உ

# முகவுரை.

இந்நூல், இக்காலத்திலே, பிராமணர்களுள்ளே, சிவபக்தசிரோன்மணிகளாய், வேதசிவாகம சிவபுராணாதி சிவசாஸ்திர பாரங்கதர்களாய், எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷதாரண சிவபூஜாதுரந்தரர்களாயுள்ள உத்தமரனேகர், சிவாசம சிவப்பிராமணாதிகளில் அதிப்பிரியர்களாயிருப்பது தெரிந்தும், சில பிராமணர்கள், தாங்கள் சிவனிடத்தும் பக்திமான்களென்று பிறர்க்குத்தெரியச் சிலசெயல்கள் காட்டுதல் மாத்திரஞ்செய்து, சுபாசுபாதி எக்கிரியைகளானாலும் விபூதி தரியாமற்செய்தால், அவைகள் (நிஷ்பலமே) பலனைத்தராதென்றே வேதவேதாந்தங்களெல்லாம் நிச்சயமாக விளக்கி, அவ்விபூதியின்மகிமையே மிகவுந்தெளிவாகக் கூறியிருக்கவும், விபூதிதரியாதவர்களாயும், வேறுகுறிகளே தரிப்பவர்களாயும், சிலர் விபூதி தரித்தாலும் போஜனாநந்தரம் அவ்விபூதியை யழித்துவிட்டுச் சந்தனக்கீறு தரிப்பலர்களாயும், சிராத்தாதிகள் விபூதிதரியாமலே செய்பவர்களாயும், முன்பு ஆத்மார்த்தஞ்செய்யாமல் அதனை அப்பிரதானமாக ஒதுக்கிப்பின்னாக வைத்துவிட்டுச், சிராத்தாதி பிதுர்காரியங்களை பிரதானமாகச் செய்பவர்களாயும், அப்பிராமண சுமங்கல ஸ்திரீகள் எல்லாரும் எப்போதும் விபூதிதரியாதவர்களாயேயிருப்ப மேற்கொண்டவர்களாயும், இன்னும பற்பல வேதவேதாந்த விரோதமான செயல்களுள்ளவர்களாயுமிருந்தும், அப்பிராமணர்கள், உத்தமோத்தம சிவாகமநிந்தனையும, சிவாகமங்களை ஈசானமுகத்தினின்றும் வெளியிட்டருளியசதாசிவமூர்த்தியின்றிருமுகங்களிற்றோன்றிய ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணர்களை இழிந்த ஜாதியினரென்றும், இது உண்மையென்று நியாயஸ்தலங்களிற்சாக்ஷி சொல்லியும், இனியென் சொல்வது, சிவப்பிராமணர்களுடைய கிரகங்கள் தங்கள் கிரகங்களை யடுத்திருக்கவும் படாதென்றும், இன்னும் பற்பல நிந்தனையுஞ்செய்கின்றார்களாதலால், அவர்கள்சொல்லை மற்றவர்கள் மெய்யென நம்பிநின்று சிவத்துரோகமேற்கொள்ளாமல், உண்மையுணர்ந்து சிவாகம சிவப்பிராமணமகிமை தெரிந்துவழிபாடுசெய்துய்யும் பொருட்டுத் திருவருளை முன்னிட்டுப் பெரியார் அனுமதிபெற்று அம்மகிமைகளை விளக்குகின்ற வேதசிவாகமாதி யுண்மைநூற் பிரமாணங்களெடுத்துக்காட்டி யெழுத நேர்ந்தது.

இது, அப்பிராமணர்கள் செய்யும் ஆதிசைவகுல சிவாகம நிந்தனைகளை மாற்றி, நன்மை விளைக்கக்கூடியதாய், லேகுவாய்ப்படித்தறியக்கூடிய வசனரூபமாயிருத்தலால், எல்லாருக்கு முபகாரமாகட்டுமென்று இதனைத், தேவகோட்டை ஸ்ரீமாந் ராம. அரு. அரு. ராம. அருணாசலச்செட்டியாரவர்கள், "காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின்மாணப்பெரிது" என்னுந்தேவ சுருதியின் வழிநின்று, அச்சியந்திர மூலமாகவெளிவரும்படி யுபகரித்தார்கள்.

உ

கணபதி துணை.

# ஆதிசைவ குலமான்மியம்.

சைவமென்னுஞ்சொல்லுக்குச் சிவசம்பந்தம்என்பதுபொருள். அரிபிரமேந்திராதி தேவரனைவர்க்கும் இறைவனாய்ச் சிவனொருவனே மேன்மையுற்று, வேதசிவாகம புராணேதிகாசாதி சமஸ்த சாஸ்திரங்களாலும் விளக்கப்பெற்று நிற்றல்போல், அச்சிவசம்பந்த சைவசமயமே, மற்றைச் சமயங்களெல்லாவற்றுள்ளும் மேன்மையுற்று, மேற்கூறிய சாஸ்திரங்களால்விளக்கப்பெற்று, மற்றைச்சமய நூல்களொன்றாலும் பாதிக்கப்பெறாமலும் அச்சமயங்கள் மற்றையமதங்களை ஒதுக்குதல்போலஒன்றையும் ஒதுக்காமலும் அச்சமயங்களையெல்லாந்தனக்குச் சௌபானங்களாகத் தழுவிக்கொண்டு, யாதொருமுட்டுப்பாடுமின்றி உத்தமோத்தமமாகி விளங்குவது. இதனை

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதசிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத்,திறத்தடைவரிதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்." என்னும் பிரபல சுருதியாற்காண்க.

இதன் பொருள், சீவர்கள்பிறந்திறவாப் பெருவாழ்வாகியமீண்டு வாராப் பேரின்பமுற்று வாழ வேண்டுமானால், லோகாயதம், நால்வகைப்பௌத்தம் ஆருகதம், என்னும் புறப்புறச் சமயங்களாறையுங்கடந்து, தார்க்கிகம் மீமாஞ்சை, நானேபிரமமெனக்கொள்ளும் ஏகான்மவாதம், சாங்கியம், யோகம் பாஞ்சராத்திரமென்னும் புறச்சமயங்கள்ஆறினும், அங்கங்குள்ளவிதிப்படி நின்று மேன்மேன் மதங்களை யிகழாமல் ஒழுகி, அப்புண்ணியபலத்தாற், பாசுபதம், மாவிரதம்,காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாதசைவமென்னும் அகப்புறச்சமயங்களாறினும், பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாதசைவம்,சிவாத்துவித சைவமென்னும் அகச் சமயங்கள்ஆறினும் புகுந்துநின்று ஒழுகியும் ஸ்மிருதிகளாகிய தருமசாஸ்திரங்களின் வழிகளில், வேதவிருத்தமில்லாத நெறிபற்றியொழுகியும், பிரமசரிய முதலியநான்கு ஆச்சிரமங்களின்விதிவழியொழுகியும், அரிய தவங்கள்செய்தும், அரிய கலைஞானங்கள் பலதெரிந்தும், நான்கு வேதங்களையும் ஆராய்ந்தறிந்தும்,அவற்றின் பொருள்நிச்சயந்

தெரிவித்தலாற் சிறப்புடைய புராணங்களுணர்ந்தும், அவையெல்லாந் தெளிவாகும்படி வேதாந்தப்பொருளைப் பலமுறையழுந்த நோக்கியாராய்ந்து முன்பின் விரோதம்வாராமற்சமன்வயஞ் செய்தறிந்தும்,இவ்வரிசையில்வழுவாது சென்றாற், சித்தாந்தசைவமார்க்கத்தி லணுகப்பெறுவார்கள்.இதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின்சிவஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்களென்பதாம். வேதாந்தம், வேதசிரசு உபநிடதம் எனப் பல பெயருள்ளது. அவ்வுபநிடதங்கள் பற்பலவுள்ளன. அவற்றுள்ளேசிலவுபநிடதங்கள் நாம்பிரமமென்னும் ஏகான்மவாதிகள் முதலியர்தங்கள் கொள்கைக்குத் தக்கபடி பொருள்கொண்டு மகிழ்தற்கு இடந்தந்து நிற்றலால், அவ்வேதாந்தங்களைப் பலமுறை ஆராய்ந்தாற்றான்முன்பின் விரோதமில்லாமல் உண்மைதெளிவாகுமென்பதுதோன்றவே, மற்றவைகளுக்குப் போல வேத சிரப்பொருளைத் தெளிந்து மென்றுடனா கூறாது, "மிகத் தெளிந்தும்" என்று அப்பிரபல சுருதிகூறிற்று. இவ்வுண்மையுற்றுநோக்கியே தாயுமானவரும், "சைவசமயமேசமயம்" என்றருளினார். ஆனால் மற்றவைகள்சமயங்களன்றோ வெனின்? அவையெல்லாம் அச்சைவசமயத்திற் புகுதற்குரிய சாதகங்களாகிய சௌபானங்கள் (படிவரிசைகள்) என்பதே அவர் கருத்தென்க. அதனையுமவரே இயல்பென்றுந்திரியாமலியமமாதியெண்குணமுங் காட்டியன் பாலின்பமாகிப், பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப்பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி, மயலறுமந்திரஞ் சிக்ஷைசோதிடாதி மற்றங்கநூல் வணங்கமௌனமோலி, யயர்வறச்சென்னி யில்வைத்து ராசாங்கத்திலமர்ந்ததுவைதிகசைவமழகிதந்தோ" என்று விளக்கியருளினார்.

இன்னோரன்ன பற்பலஅற்புதமகிமைவாய்ந்த சுத்தாத்துவித சித்தாந்த சைவர்கள், அநாதிசைவனாகிய பரமசிவனையே தமக்குப் பதியாக்கொண்டு அப் பெயரையே வகிக்கப்பெற்ற, ஆதிசைவர், மகா சைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர் அந்தியசைவரென ஆறுவகையினரென்க. இவருள்ளே, ஆதிசைவரென்பவர்கள், சதாசிவமூர்த்தியினது, ஐந்து திருமுகங்களினின்றுந்தோன்றி, அச்சதாசிவனாலேயே தீக்ஷிக்கப்பெற்றகௌசிகர், காசியபர், பாரத்துவாசர், அத்திரி,கௌதமரென்கின்றபஞ்சரிஷிகோத்திரத்தில் உற்பவித்தவர்கள். இவர்கள் சிவமுகத்தில் வந்தவர்களாதலால், சிவப்பிராமணர்களென்னும் பெயர்உரிமையாற் பெற்றனர். மற்றைப்பிராமணர்கள் தம்ஜாதிப்பெயர் முதலில் சிவஎன்னும் விசேஷணம் வகிக்கப்பெறார்கள் தம்சாதிப்பெயர் முதலில் சிவசப்தம் வகிக்கப்பெற்ற இத்தகைய சிவப்பிராமணர்களே, சமயவிசேஷ நிருவாண சிவதீக்ஷை ஆசாரியாபிஷேகம் முதலிய சிவசமஸ்காரங்களைத்தம் கீழுள்ளபிர்மக்ஷத்திரிய வைசிய சூத்திராதியர்களுக்குச் செய்துவைத் தற்குரிய அதிகாரத்தைச் சிவாஞ்ஞையாற் பெற்றவர்கள். இவர்களே, பரார்த்தமாகிய சிவாலயாதிகளில்நித்தியநைமித்திககாமியாதி

பூஜனைகளும், கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம். பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தங்களும் உள்ளபடி சிவாகம விதிகளை அறிந்து செய்தற்குரிய அதிகாரிகள். இவரையொழிந்த மற்றைப் பிராமணர் முதலியோர் ஆத்மார்த்த பூஜனையே சிவாகம விதிப்படி அச்சிவப் பிராமணர்களிடத்துச் சிவதீக்ஷைபெற்றுச் செய்யத்தக்கவர்கள். இவர்கள்பரார்த்த பூஜனை செய்யப்படாது. மோகலோப முதலிய எந்தக் காரணத்தினாலாவது பரார்த்தபூசனை செய்வாராயின், அரசனுக்கும் தேசத்துக்கும் மற்றையோர்க்கும் பெருங்கேடு விளையும். இனிமகாசைவராவார்மேற்கூறியசிவப்பிராமணர்களிடத்திலேசிவதீக்ஷைபெற்றபிராமணர்களே. இவர்கள். சதாசிவர், மகேசுரர், ருத்திரர், விஷ்ணுஎன்னும் நால்வருக்கும் கீழுள்ள பிரமதேவர் முகத்தில் தோன்றினவர்களாதலாற், சதாசிவமுகத்திற்றோன்றிய சிவப்பிராமணர்களினின்றும் நான்கு படி கீழுள்ளவர்களாகின்றார்கள், இனி அநுசைவராவார், சிவதீக்ஷைபெற்ற க்ஷத்திரியவைசியர்களே. அவாந்தர சைவராவார் சிவதீக்ஷைபெற்ற சூத்திரர்களே. பிரவரசைவராவார் சிவதீக்ஷைபெற்ற அநுலோமர்களே. மற்றையோர் அந்தியசைவர். இவ்வுண்மைகளை.

“கௌசிகக்காசியபச்சைவ பாரத்துவாஜோத்திரிரேவச,
கௌதமச்சேதிபஞ்சைதே பஞ்சவக்திரேஷு தீக்ஷிதா:
கர்ஷணாதிபிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி யுற்சவாந்தகம்,
உற்சவாதிபிராயச்சித்தம் ஞாத்வாசர்வம்சமாசரேத்.
அந்நியேஷாம்சுவார்த்தயஜனம் நகுர்யாதுபரார்த்தகம்,
மோஹால் லோபாச்சகுர்வீத ராக்ஞோராஷ்டிரஸ்ய துஸ்திதி:”
என்னும் வாதுளாகம வசனத்தாலும்

“அரியசதாசிவனென்போனனாதிசைவனவன்பாலவதரித்தசிவமறையோராதிசைவரிவர்பால், உரியசிவ தீக்கைபெற்றபூசுரர் மாசைவருயர்த்தவரசன்வணிகனனுசைவராவார், பெரியகுலவளப்புயத்தோனவாந்தரசைவன்சீர்பெறுசவன்னனாதியனுலோமர்பிரவரராம், விரியவனியிசையொழிந்தோரந்தியசைவத்தோர் விரித்திடுமெய்ச்சைவவிதமிவையெனநூல்விளம்பும்.”

என்ற ஆசௌசதீபிகையாலும் மற்றும் பற்பல பிரபலப் பிரமாணங்களாலும்நன்குதெளியலாம்.

இக்காலத்திலே, உண்மை யறிவும் திண்மை ஒழுக்கமும்வாய்ந்த பிராமணர் பலரொழிய, அவை யில்லாத சில பிராமணர்கள் சிவாகமங்களையும் செந்தமிழ்வசனகளையும் லாகவமாக்கி ஓதுக்குகின்றார்கள். அது, அவர்களை மேலுமேலும்அதிபாதகராக்கி மீளாநரகத்துக்கு ஆளாக்குஞ்செயலன்றிவேறில்லை. ஒதுக்தம் அவர்களுக்கும் முக்கியப் பிரமாணமாகிய வேதபுராணேதிகாசாதிகளும், சிவாகமங்கள்செந்தமிழ் வசனங்களை விசேஷித்துக்கூறுகின்றனவேயாம். அவற்றுளொன்றாகிய கந்தபுராண சங்கர சங்கிதையிலுள்ள

ஆலாஸியமகாத்மியத்தில்வேதார்த்தநிர்ணயம்புகலும் அத்தியாயத்தில்தெக்ஷிணாமூர்த்தியே,கண்ணுவாதி மகரிஷிகளுக்குச் சதாசிவ மூர்த்தியின் ஐந்து முகங்களில்உயர்ந்த ஈசானமுகத்திலே,சிவாகமங்கள் (௨௮ம்)அதன்கீழுள்ள தத்புருஷஅகோரவாமதேவசத்தியோஜாத முகங்கள் நான்கிலும், நான்வேதங்களும்தோன்றின என்றுகூறியருளினர், இதனாலும், வேதங்களினின்றும் சிவாகமங்களுக்கு விசிட்டமேவிளக்கமாகி, வேதங்களை மாத்திரமேற் கொண்டவைதிகப்பிராமணர்களைக் காட்டிலும், அவ்வேதங்களையும்அவற்றின்சாரமாகியவிசிஷ்டமுள்ள சிவாகமங்களையும் மேற்கொண்ட வைதிகசைவர்களாகிய ஆதிசைவரென்னுஞ் சிவப்பிராமணர்கள் மிகமேலானவர்களென்பது தெளிவாயது.

இனிச்செந்தமிழ்மொழிக்கும்எல்லையில்லாதவைதிகமகிமைகளுள்ளன விரிப்பிற்பெருகும். நிற்க எல்லாப்பாஷைகளும் அந்தந்தத்தேசவாசிகள் விஷயங்களுணர்ந்துகோடற்பொருட்டுச்சிவாஞ்ஞையால்நிகழ்வனவே. ஒன்றுந் தள்ளுபடியில்லை. அவற்றுள்ளேவடமொழி தென்மொழி யிரண்டும், சிவபிரானே இலக்கணவரம்பு செய்து இரண்டு மகரிஷிகளுக் குபதேசிக்கப் பெற்றமையால், அவ்விரண்டு பாஷைகளு மிகச்சிறந்தனவே. இதுபற்றியே திருமந்திரமும், "ஆரியமுந் தமிழுமுடனேசொல்லிக், காரிகையார்க்குங்கருணைசெய்தானே" என்று விளக்கியருளியது. இதன்பொருள் பரமசிவன் தமதுபத்தினியாராகியஉமாதேவியாருக்குவடமொழியுந்தென்மொழியும் உபதேசித்தருளினனென்பதாம் இதுபோலத் தமிழ்விசிட்டங் கூறும் பிரபலப் பிரமாணங்கள் பற்பலஉள்ளன. பரமசிவன் தமிழிலக்கணத்தைத் தனக்குச் சமானரொன்று உலகெலாமுணர விளக்கிய அகஸ்திய மகரிஷிக்கு உபதேசித்ததாலும், மற்றும் பற்பல அற்புத மகிமைகளாலும் வடமொழியைக் காட்டிலும் தமிழுக்குவிசிட்டங் கூறுவார்பலர். ஆகவேஅப்பிராமணர்கள் இதுதமிழ்தானேயென்று ஏழனஞ்செய்துஒதுக்குவது,அவரது அறியாமையன்றிவேறில்லை. அவர்செய்யும் ஏழனமும்பரமசிவன்வரையிற்செல்லுதலால், அப்பிராமணர்கள்பரமசிவதண்டனைக்கே ஆளாவரென்க.

இனிச், சதாசிவமுகோற்பநர்களாதலாற் சிவபுத்திரர்களாய் அப்பரமசிவனைப்போலவே, வேதவேதாந்தசடங்க சிவாகமாதி சகல சாஸ்திரபாராயண அத்தியாபகத்துவாதிகளிலும், தமக்கு கீழுள்ள பிர்மக்ஷத்திரிய வைசிய சூத்திராதியர்க்குச் செய்துவைக்கின்ற சிவதீக்ஷாதிசகலகிரியைகளிலும், பரிபூரணமான அதிகாரமுள்ள ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணர்களுக்கு வேதாத்தியயனாதிகளில் அதிகாரமில்லையென்று, அசூயையேநிரம்பப் பெற்று அகந்தையே மேற்கொண்டு அறிவிழந்த சிலபிராமணர்கள் கூறுகின்றார்கள். அப்பிராமணர்கள் அங்ஙனங் கூறுவது,சார்வபௌமனாகிய ராஜகுமாரனுக்குரியதென்பதில் ஓரணுவளவுஞ் சந்தேகத்துக்கிடமில்லாத ராஜகிரீட மில்லை.

யென்றுயாரேனும் ஊத்தை வாயாற்கூறினால் அதனேடொக்குமன்றி வேறில்லை. ஆயினும், அக்கூற்று உதைபட்டொழியும்படி கூற்றுதைத்த பரமேசுரவாக்காகிய பிரபலப்பிரமாணங்கள் பின்வருவன. உத்தம விவேகிகள்காண்பாராக.

## பௌஷ்கராகமம் கிரியாபாதம்.

வேதாகமபரஸ்யைவ சாதிகாரோவிதீயதே
வேதாகமாசாரபர: சிவத்விஜயிதீரித:
தஸ்யநித்யமதீதவ்யா: வேதாஸாங்க பதக்ரம:
தஸ்யவிப்ரஸ்ய சம்போச்ச பேதோநாஸ்தி நஸம்ஸய:
பேதம்யக்கல் ப்யதேமோகாத் சதுராத்மா நஸம்ஸய:

இ-ள் வேதாகமங்களில் உரிமை உள்ளவர்களுக்கு அதிகாரம் விதிக்கப்படுகிறது. வேதாகமங்களின் அனுட்டானத்தில் சிரேஷ்டர்கள் என்று சிவத்துவிஜர்கள் சொல்லப்படுகிறார்கள். அந்தச் சிவத்துவிஜர்களால் பதக்கிரமங்களுடன் சாங்கமாக வேதங்கள் பிரதிதினமும் அத்தியயனம் பண்ணத்தகுந்தவைகள். அவ்விதமாக அத்தியயனம் செய்த சிவத்துவிஜருக்கும் பரமசிவனுக்கும் பேதமில்லை இதிற்சந்தேகமில்லை. எவனவது அறியாமையினலேபேதங்கல்பிப்பானுனல் அவன் துராத்மாவே சந்தேகமில்லை யென்பதாம்.

## மகுடாகமம்.

வேதாங்கநாநாவிதமந்த்ர தந்த்ரமுத்ரா கிரியாசில்பசுவாக்சுரூபம்
ஆசாரயுக்தம் சுகுணம்ஸ்வரூபம்ஆசாரியமாகூ: சிவம்ஆதிசைவம்.

இ-ள் வேதங்கள் சடங்கங்கள் அனேகவித மந்திரங்கள் சிவாகமங்கள் தொண்ணூற்றாறு விதமான முத்திரைகள் கர்ஷணுதிபிராயச்சித்தாந்த கிரியைகள் சில்ப நூல்கள் இவைகளை ஓதிஉணர்ந்தவர்களும், சுரூபசுவாக்மான்களும், ஆசாரஅனுஷ்டானமுள்ளவர்களும், சுகுணவான்களும், தேஜோவான்களும்,சிவாசாரியர்களுமாகிய ஆதிசைவர்களைச் சிவனென்றே சொல்லுகிறார்கள். என்பதாம்.

## வீராகமம்.

வேதசாஸ்திரேஷு நிபுணக: சைவசாஸ்திர பரிக்ர:
மந்தாக்ஞோ மதிமான் பிரக்ஞ: த்ருடபக்தி த்ருடவிரத:
ஆதிசைவ இதிப்பு ரோக்த: சசிவப்ராமணோ குரு:

இ-ள் வேதசாஸ்திரங்களில நிபுணர்களும், சிவா கமபாரங்கதர்களும், மந்திரசாஸ்திரங்களை அறிந்தவர்களும், விசேஷபுத்திமான்களும்,திடமான சிவபக்திமான்களும், சிவவிரதிகளுமாகிய அந்த ஆதிசைவர்கள் சிவப் பிராமணர்களென்றும் லோக குருவென்றும் சொல்லப் படுகிறார்கள். என்பதாம்.

சகலாகமசங்கிரகம் இது எல்லாஆகம தாற்பரியங்களையும் சங்கிரகித்து பரமசிவன் பார்வதி தேவியாருக்கு உபதேசித்தருளியது.

தேவஸ்ய சந்நிதௌ நித்யம்ஆதிசைவ நிரந்தரம்
வேதபாராயணங்காரியம் நாந்யசேதோபி ரத்ரிஜே.

இ-ள் இமேருற்பர்வதராஜபுத்திரியே? சிவசந்நிதியில்எப்பொழுதும்ஆதிசைவர்கள் ஒரே மனசாக வேத பாராயணம் செய்யவேண்டும். என்பதாம்.

இதுவுமது.

சிவ தீக்ஷா பரோ விப்ர: ஆதி சைவப்ர கீர்த்தித:
தஸ்யைவ வேதாத்யயனே அதிகாரோ விதீ யதே
சதுர் வேதாநதீத்வாத ஸ்வ ஸ்தி கார்யம் நசாபரை:
தீக்ஷா பரை ரேவகார்யம் ப்ராதாங்யேநமகேஸ்வரி
ஸமீபே தேவதேவஸ்ய சிவதீக்ஷா பரைர்த் விஜை:
ஆதி சைவ சதாகார்யம் வேதபாராயணம் புதை:

இ-ள் ஆதிசைவன், சிவதீக்ஷாபரனானசிவப்பிராமணனென்று சொல்லப்படுகிறான்.அவனுக்கே வேதாத் தியயனத்தில் அதிகாரம் விதிக்கப்படுகிறது அவன்நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்தபின்பு வேதபாராயணம் செய்யவேண்டும். (இவனுக்கே நான்கு வேதங்களில் அதிகாரமுண்டு) மற்றையபிர்மக்ஷத்ரிய வைசியர்கள் தங்கள் தங்களுக்கு உரிய வேதசாகைகளை அத்தியயனம் பண்ணலாமன்றி அந்நியவேத சாகைகளை அத்தியயனம்பண்ணக்கூடாது.சிவதீக்ஷாவான்களாகியஆதிசைவர்களேமுதன்மையான வேத பாராயணர்கள். சிவதீக்ஷாவான்களாயும்வித்வான்களாயும் உள்ள ஆதிசைவர்களாலேயே சிவ சமீபத்தில் சதாகாலமும் வேதபாராயணம் பண்ணத்தகுந்தது. என்பதாம்.

இதனால், ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணர்கள், நான்குவேதங்களும் அத்தியயனஞ் செய்யவும், தங்கீழுள்ளபிர்ம,க்ஷத்திரிய, வைசியர்களுக்குச் சொல்லிவைக்கவும், வேதாத்தியனவரிசையில். தாங்களே மற்றை மூன்று வருணத்தாரினு முன்னின்று அதாவது முதன்மையாக அத்தியயனஞ் செய்துவரவும், பரிபூர்த்தியான அதிகாரிகளென்பதும், மற்றைய மூன்றுவருணத்தாரும் அவரவர்களுக்குரிய அந்தந்த வேதசாகைகள்மாத்திரம் ஓதுதற்குரியர்களன்றிநான்குவேதங்களும் ஒருங்கே அத்தியயனஞ்செய்தற் குரியரல்லரென்பதும் தெளிவாயது.ஆகவே சிவப்பிராமணர்களுக்கு வேதாதிகாரமில்லை யென்னும்மூடவசனம் தூரம்போய்த் துச்சமா யொழிந்ததென்க.

ஒருவாறு இதுகாறும்கூறிவந்த சுருதியுத்திப் பிரமாணங்களாலும்,இன்னும்எத்தனையோ ஆங்காங்குள்ளஅதிபிரபலசுருதிப் பிரமாணங்களாலும், பிரமாமுகோற்பனவைதிகப் பிராமணர்களைக்காட்டிலும், சதாசிவ முகோற்பன வைதிக சைவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்கள் மிக மேலானவர்களென்

பது விளக்கமாகின்றது. இனிஅனுபவத்தாலும் லோகப்பிரசித்தமே. இது சிவாலயாதிகளில் அச்சிவப்பிராமண பாலியர்களிடத்துங்கூட வயசு முதிர்ந்த வைதிகப்பிராமணர் சந்நியாசிகள் முதலியஎல்லாரும்இருகைகளையும் நீட்டி விபூதிவாங்குதல் முதலிய உத்தமகாரியங்களால் யாவரும் நேரேதெரிந்தவிஷயமே. இவையெல்லாமிங்ஙனமாகவும், இன்னோரன்ன பற்பல அற்புதமகிமைவாய்ந்த சிவதுல்லியர்களாகிய சிவப்பிராமணர்களை, இக்காலத்திற்சிலர் தாம்பிராமணரென்பது பேர்மாத்திரையாயொழியப் பொறாமையாதிதுர்க்குணங்களைமேற்கொண்டு இகழ்ந்துஒதுக்கிப்பேசுகின்றார்கள். அதிப் பிரபலப் பிரமாணங்களில் ஒருசிறிதும் நோக்காமல்தமக்குவரும் உய்தியில்லாத சிவத்துரோகத்துக்கே யாளாக நிந்திப்பார்களானால், அங்ஙனம் நிந்தித்தற்குக்காரணம்யாதென்பதுபுத்திமான்கள் ஊகித்துணரத்தக்கதே. அக்காரணத்தைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் விளக்கிக்காட்டியுள்ளார். அதாவது' "நலத்தின்கணாரின்மை தோன்றினவனைக், குலத்தின் கணையப்படும்." என்னுந் திவ்விய சுருதியே. இதன்பொருள் ஒருவனிடத்து, வேதசிவாகம புராணேதிகாசாதிநூல்களில், உயர்வென்று கூறுகின்ற நன்மையினிடத்துப்பிரியமில்லாமை தோன்றுமானால், அவனைஉலகம் அவன் குலத்தினிடத்துச்சந்தேகப்படும் என்பதாம். எனவே, அவன் தன் பிதாவுக்குப் பிறந்தவனல்ல தன் தாய் அன்னியபுருஷனைக் கூடிப் பெறப்பட்டவனே என்பதே அத்திவ்விய சுருதியின்கருத்தென்க.

இனிஅப்பிராமணர்சிலர்மேற்கூறியவாறு சுருதியுத்தி அனுபவங்களாலுஞ்சிறந்துள்ளமகிமைநோக்காது,சதாசிவமுகோற்பன சிவப்பிராமணர்களைச், சிவாலயாதிகளில் கூலிக்குப் பூசைசெய்கின்றார்களென்றும், அதனால்அவர்கள் இழிந்தவர்களென்றுங் கூறுகின்றார்கள். கூலிப் பூசனை இழிவு தருமென்பதுண்மையே. "தன்குற்றநீக்கிப் பிறர்குற்றங்காண்கிற்பின், என்குற்றமாகுமிறைக்கு"என்பதுசுருதி அப்பிராமணர்களில்கூலிக்குவேதம்படிப்பிக்கின்றாரனேகர், கூலிக்குப் பூசை செய்கின்றாரனேகர், கூலிக்குச் சூரியநமஸ்காரஜெபதவஹோமாதிகள் செய்கின்றாரனேகர், கூலிக்குக்கணக்கெழுதுகின்றாரனேகர், அந்நியவிக்கிரயமாதிகளுக்குச் சிறிதும் பொருந்தாதமிகச்சாமானியவேலைகள் பற்பல செய்கின்றாருமனேகர். இவை யெல்லாம் கூலிவேலையல்லவோ?

இவர்களுக்கெல்லாம் இழிவுகூறாமற்பெருமைப்படுத்திக்கொண்டாடுகின்ற அப்பிராமணர்கள், சிவப்பிராமணர்களை மாத்திரம்இழித்துக் கூறினால் அவர்களை ஓரணுத்துணையாவது நீதியுள்ளவர்களென்று பெரியோர்கள்மதிப்பார்களா? அப்பிராமணர்கள் செய்யுங் கூலித்தொழில்களை நான் வெளியிட்டேனென்று என்னைப் புறங்கூறார்கள்; தத்தம்வருணாச்சிரமதருமங்கள் நழுவவிடாது மேற்கொண்டொழுகும் உத்தமப் பிராமணர் முதலியோரென்க

எதனால் அக்கூலிவேலைகள் லோகப்பிரசித்தமாதலால்.

இதனால், அத்தியாபகர்கள் முதலிய உத்தமப் பிராமணரையுங் கூலித்தொழிலாளரென்று கூறவந்தேனல்லேன். சிவப்பிராமணர்களை, அப்பிராமணர் சிலர் அங்ஙனங் கூறியது நோக்கியெடுத்துக்காட்டியதன்றி வேறில்லை. ஆனால் முறைவுதானென்னையோ வென்றால்:- சித்தசமாதானத்துடன் உத்தமர்களுணர்வார்களாக. அதாவது சிவாலயத்திற் சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார்க்கு மாசம் இன்னசம்பளமென்று அவ்வதிகாரிகள் பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், பாடசாலாதிபதிகள் கனபாடிகளுக்கு அவ்வாறு பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், கிரகஸ்தாஷாதிகளுக்காகச் சூரியநமஸ்காரஞெபதபபூஜாதிகளுக்கு நாளொன்றுக்கு இன்னது என்று பேசிக்கொண்டு கொடுத்து நடத்தலும், முறையல்ல. பின்னை யெப்படியென்றால், குருக்கள்மார் கனபாடிகள், முதலியோர்களுடைய குடும்ப சம்ரக்ஷணைகளை அதிட்டிக்கமை செல்வேயடத்தித் தெக்ஷிணையாகச் சமர்ப்பிக்கவேண்டியதே முறைமையென்க. இவ்வுண்மையாவரு மேற்கொண்டு நடத்தும்பொருட்டே சிவாகமாதிகளில் மகோத்சவாதிய கும்பாபிஷேகக்கிரியாதிகள் கூறுமிடத்து அந்தச் சிவத்திரவியத்திற் பத்திலொன்றில் ஒருபங்கு சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார்க்கென்று நியமித்திருக்கின்றது. முற்காலத்திலிங்ஙனமே கூறியவாறே நடந்ததாக நூல்கள்கூறுகின்றன. தற்காலத்திலும் சிற்சில இடங்களில் அவ்வாறு மானியங்கள் ஏற்பாடாகி நடக்கின்றன. ஆதலால் சம்பளமென்று பேசிக்கொடுப்பது எவ்வழியினும் முறையல்ல. அங்ஙனமாகவும் சிலவிடங்களில் அதிபதிகள் சம்பளமாகப் பேசிக்கொண்டு நடத்துவது காலவேற்றுமையாற் போலும். மற்றையிழி தொழிலாளரை அவர் தலைவிதியே அவ்வையன்றுண்டாக்கிவிட்டு உத்தமகாரியமாகிய அத்தியாபனாதி செய்வோரையும் உத்தமோத்தமசிவகாரியமாகிய சிவாலயபூஜாதி செய்வோரையுங் கூலித்தொழிலாளரென்று இழிவு கூறாது புகழ்ந்து பாராட்டுவதே நடுவுநிலை சிறிதுந் தவறாத பெரியோர் கடமையாகும்.

இனிச் சிலதுர்க்குணிகளாகிய அப்பிராமணர்கள் உத்தமோத்தம சிவப்பிராமணர்களை பிராமணனுக்குப் பிராமண கன்னிகையிடத்துப் பிறந்த கானீனரென்றும், மகாதேவ பூஜைக்காக சமந்திரகமாக உபநயனஞ்செய்யப் பெற்றுச் சிவாகமமாத்திரம் படிக்கத்தக்கவர்களென்றும், இதற்குப் பிராமணம், சிலநாள்முன் ஒரு பிராமணராலெழுதப்பட்ட வைத்தியநாதமென்னும் நூல் கூறுகிறார்கள். மேஷநூலுக்கு வியாக்கியானஞ் செய்தவர், இதற்குப் பிரமாணம் சாதிநிர்ணயமென்னும் நூலென்றும் அதனைக்கேளுமிருக்கலாமென்றுங் கூறுகின்றார். இந்தஉழற்றுபடையைவிரிப்பாமினன். பரமேசுரனருளாகிய வேதசிவாகமங்கள், அவற்றின் வழிவந்த புராணேதிகாசங்கள் முதலிய புராதன சிவசாஸ்திரங்களை நோக்க, நூதனவைத்தியநாதம் எம்மாத்திரமாகும்.

அன்றியும் குணாதீதபரமேசுரவாக்காகிய சிவாகமங்கள், சதாசிவமுகோற்பவர்கள் உத்தமோத்தம சிவப்பிராமணர்களென்று கூறுகின்ற ஆப்தவாக்கியங்களைத், திரிகுணவசப்பட்டுச் சில்வாழ்நாட்பல்பிணிச் சிற்றறிவினராய சீவர்களில் ஒருவர், சிலநாள் முன்எழுதிய வைத்தியநாதமா? மறுத்துத்தன்கொள்கையை நிலைநிறுத்தும். இதை இன்னும் விரிப்பதநாவசியம். அமைக.

வசிஷ்டாதி மகரிஷிகள் பலர், வேசி வலைச்சி புலைச்சி மண்டூகம் சுவானம் கார்த்தபம் முதலிய இழிந்தஸ்தானங்களிற்பிறந்தவர்களென்று வேதோபப்ருஹித புராணாதிகள் கூறுவதுண்மையாயிருக்கவும், அப்பிராமணர்கள் தங்களைக் கானீனர்களென்று பொய்கூறுவது தெரிந்திருக்கவும், அவர்களைச் சிவப்பிராமணர்கள் இழித்துக்கூறுகின்றார்களா? என் அப்பிராமணர்கள்வீண் வம்பு கூறவேண்டும். ஈண்டுக்கானீனரென்று கூறியபொய்யை வீண்வம்பென்று மறுத்தற்கு உரைத்ததன்றி வசிஷ்டாதிகள் தோற்றத்தின் இழிவு கூறவந்ததன்று. வசிஷ்டாதியர்கள்தோன்றிய ஸ்தானங்கள் இழிந்தனவாயினும் பீஜத்தாலும்ஞானமுதலிய குணங்களாலும் அவர்கள் உயர்ந்தவர்களே யென்ப துலகெலாமுணர்ந்த வுண்மையே.

இனித், தேவர்களுள்ளே பரமசிவனே பிராமணன்; விஷ்ணு க்ஷத்திரியன்; பிரமா வைசியன்; இந்திரன் சூத்திரனென்று வேதமும் மற்றும் வழிநூல்களுங் கூறுகின்றன. இது அவ்வேதமுதலிய நூலுணர்ந்தார் யாவருந்தெரிந்தவிஷயம்; இம்முறையாலும் தேவச்சாதியில் வைசியச்சாதியினராகிய பிரமாமுகத்திற்றோன்றிய பிராமணர்களைக்காட்டிலும், பிராமணச்சாதியினராகிய சதாசிவமுகத்திற்றோன்றியசிவப் பிராமணர்கள் மிக மேன்மையுள்ளவர்களென்பது பரிஷ்காரமாக விளக்கமாகும். இனி, அப்பிராமணர்கள், சிவப்பிராமணர்களிற் சிலரிடத்துக் கல்வியறிவொழுக்கங்களின்மை குறித்து அக்குலத்தை இகழ்கின்றார்கள். இஃதென்ன புத்தியோ? அங்ஙனம் இகழ்கின்ற பிராமணர்களிற் கல்வியறிவொழுக்கங்களில்லாதவர்களில்லையா? எண்ண முடியாதே. அதற்காக அக்குலம் இழிந்ததென்றேயாவது கூறமுடியுமா? அல்லது; எந்த உலகத்தில் எந்தத்தேசத்தில் எந்த ஊரில் எந்தச்சாதியில் எல்லாரும் அறிவாளிகளாயிருப்பார்கள்? சிலர்பலர் அறிவில்லாதவர்களாயிருந்தால் அதற்காக அந்தச் சாதி அதற்குள்ள தன்மையிற் குறைவுபடுமோ? இதனைப் புத்திமான்கள் ஊகித்துண்மைகூறுவாராக.

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள காலந்தொட்டுத்தே, சிறிதும்மாறுபடாமற் சிவாகமவழியாகவே ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேச சிவதீக்ஷாதிகள் சிவாலய கைங்கரியாதிகள் மேற்கொண்டு ஒன்பது சிவாலயங்களுக்கே கொத்தடிமைகளாய்ப் பரம்பரைச் சுத்தசைவகுலத்தினராய் வாழுகின்ற தனவைசியகோத்தாரங்கள், தங்களுக்கு வேதத்தைக்காட்டிலும் முக்கியமாகிய சிவாகமங்கட்கு விரோதிகளாகிய அப்பிராமணர்கள்கூறுஞ் சிவாகமபராக்ஷவிரோதங்களுக்குச் செவி

கொடார்கள். ஒருவாறுசிலர் கேட்டாலும் அங்ஙனம்கேட்பவர்களும் தாந்தாம் மேற்கொண்ட சிவாலயபூசாதிகளில் சிவப்பிராமணர்களாகிய குருக்கள்மார்வழியாகவே நடத்திவருகின்றார்களன்றி வேறில்லை. உலகத்திலே எத்தனையோ சாதியார்க்குக்குருக்கள்வகை அனேகமிருந்தாலும், இச்சிவப்பிராமணர்க்கே குருக்கள் என்றசொல் நிருபபதமாக யோகரூடியாய் லோகப்பிரசித்தமாய்விளங்குகின்ற மேன்மையும் இவர்கள்மகிமையைஉள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கும்.

பிரமா முகோற்பந்ந ரிஷிவம்சத்தவர்களாகிய பிராமணர்கள், தங்களுக்குமேல் நான்குபடி யுயர்ந்த சதாசிவ முகோற்பந்ந மகரிஷிவம்சத்தவர்களாகிய சிவப்பிராமணர்களையும், சிவாகமாதிகளையும், நிந்தித்தற்குக் காரணத்தை, எங்கே புகையுண்டோ அங்கே நெருப்புண்டென்று அனுமானித்தல்போல,

"நலத்தின்க ணாரின்மை தோன்றினவனைக் குலத்தின் கணையப்படும்"

என்று முன்னர் அனுமானப் பிரமாணத்தாற் காட்டிய மாத்திரமன்றி ஈண்டுச் சுருதிப்பிரமாணமுங் காட்டப்படும்.

இத்யுக்தாவதத்விஜாங் வீக்ஷிய யக்ஞவாடமுபாகதாந்
யூயம்விப்பிராதமாச்சர்வே குசாஸ்த் ராசக்தமாநசா:
சிவத்துரோக பராங்நித்யம் சிவார்ச்சன பராங்முகா:
வேதமார்க்கைகவிமுகா: சிவப்பிர்ய விநிந்தகா:
நரகேஷுசசர்வேஷு பததாத்யந்ததுக்கிதா:.

என்ற சங்கரசங்கிதை தக்ஷகாண்டம் உ௯-வது அத்தியாயம் உ௫, உ௬ வது சுலோகங்களாற் காண்க.

இது, தக்கன்யாகத்திற் சென்றததீசிமுனிவர், அவனுக்குச் சிவபரத்துவத்தை யதிவிஸ்தாரமாகக் கூறிப் பின்பு, அத்தக்கன் சிவநிந்தகனென்பதும், அவன் கொடுக்கும் அன்னத்தைப் புசித்தாற் சிவத்துரோகமே விளையுமென்பதும், ஒரு சிறிதும் நோக்காது, அதிவிசேஷ போசனப் பிரியர்களாய் அங்குவந்திருந்த பிராமணர்களை நோக்கிக் கூறியது. இதன்பொருள், அப்பிராமணர்களைப் பார்த்துச் சிவநிந்தகனாகிய இத்தக்கன்யாகசாலையில் வந்திருத்தலாற் பிராமண அதமர்களாகிய நீங்களெல்லாரும், வேதசிவாகம விரோதமான குசாஸ்திரப் பிரியர்களாய், நித்திய சிவத்துரோகிகளாய், வைதிக சைவமார்க்க சிவபூஜாதிகளிற் பராமுகர்களாய், சிவபக்தநிந்தகர்களாய், எல்லா நரகங்களிலும் விழுந்து பெருந்துக்கமடையக் கடவீர்களென்பதாம்.

இதன் தாற்பரியத்தைத் தமிழில்,

பேசரிய மறைகளெலாம் பராபரனீ யெனவணங்கிப் பெரிதும்போற்றும்
ஈசனையு மன்பரையு நீற்றெருடுகண் டிகையிலையு மிகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவரா யெந்நாளும் பிறந்திறந்து கதியுறாது
பாசமதனிடைப் பட்டு மறையுரையா நெறியதனிற் படுதிரென்றான்.

என்ற கந்தபுராணம் தக்ஷகாண்டம் அநந்தன் சாபநீங்குபடலம் ௩௯-வது திருவிருத்தத்தால் விளக்கப்பெற்றது. இதன்பொருள்,

வேதசிவாகமாதி சாஸ்திரங்களெல்லாம் சுத்தமாயாதீத பரம்பொருள் நீயேயென்று பன்முறையும் பணிந்து துதிக்கின்ற பரமேசுரனையும், அவனடியார்களையும், விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷர சிவசாதனங்களையும், நிந்தித்து நீங்களெல்லாரும் இப்பூமியிற் பிராமணர்களா யெப்போதும் பிறந்திறந்து நற்கதி பெறாதுழன்று, பாசபந்தப்பட்டு வைதிக சைவவிரோதமார்க்க மேற்கொண்டு நீங்கா நரகிற்கிடந் துழலக் கடவீரென்றான் என்பதாம்.

ஆனால், இச்சுலோகத்திலும் திருவிருத்தத்திலும் மேற்கூறிய பிராமணர்கள் சிவாகமங்களையும், சிவத்துவிசர்களையும், நிந்தித்தற்குக் காரணம் காணப்படவில்லையே யென்றால், இத் திருவிருத்தத்தில் ஈசனையென்றதனால் ஈசனாற் கூறப்பெற்ற சிவாகமநிந்தனையும், அன்பரையுமென்றதனால் சிவனன்பர்களாகிய சிவத்துவிசர்கள் நிந்தனையுமுள்ளவர்களென்பது விளக்கமாகும். இனி, குசாஸ்த்ராசக்தமாநசா: என்ற குறிப்பும் சுசாஸ்திரமாகிய சிவாகமநிந்தகர்களென்பதையும் அதனைமேற் கொண்ட சிவப்பிராமண நிந்தகர்களென்பதையும் விளக்கும். இதனால் பிரமாமுகோற்பந்நராகிய அப்பிராமணர்கள் தம்மில் நான்குபடி யுயர்ந்த சதாசிவ முகோற்பந்ந சிவப்பிராமணர்களையும் சிவாகமாதிகளையும் நிந்தித்தற்குக் காரணம், ததீசி மகரிஷியின்சாபமேயென்பது தெளிவாயது. சாபம் இஃதொன்றுமட்டோ? கௌதமமகரிஷியும், அப்பிராமணர்கள் துற்புத்தியாற் செய்த வஞ்சனைநோக்கிச் சபித்திருக்கின்றனர். அதாவது,

புராதாருவநேபுண்யே முநயோகிரஹமேதிந:
ஈச்வராராதநார்த்தாய தபச்சேருஸ்ஸஹஸ்ரா:
தத:கதர்சிந்மஹதீகால்யோகே நதுஸ்தர:
அநாவிர்ஷ்டி ரதீவோக் ராஹ்யாசீத் பூதவிநாசிநீ
ஸமேத்ய ஸர்வேமுநயோகௌதமம் தபஸாம்நிதிம்
அயாசந்த க்ஷுதாவிஷ்டா ஆஹாரம் ப்ராணதாரணம்
சதேப்ய: ப்ரததாவந்நம் மிஷ்டம் பஹுதாம்முதா: என்பதாம்

இ-ள், முன்னொருகாலத்தில் தாருவனத்தில் கிருகஸ்தர்களாகிய முனிவரனேகர் சிவாராதனையின் பொருட்டுத் தவஞ்செய்து வந்தார்கள். அப்போது காலபேதத்தினால், பெரியதும், கடத்தற்கரியதும், உயிர்களை வருத்தக்கூடியதுமான துற்பிக்ஷம் (பஞ்சம்) வந்தது. அப்போது அம்முனிவரெல்லாம் பசியினால் வருந்தித் தபோநிதியாகிய கௌதம முனிவரை யடைந்து பிராணதாரமாகிய அன்னம் வேண்டுமென்று யாசித்தார்கள். அவர்களுக்கு சந்தோஷத்துடன் மிகுதியாக அன்னமளித்து ரக்ஷித்தனரென்பதாம்.

இவ்விதம் கௌதமர் அன்னமளித்து ரக்ஷித்துவருங்கால், அப்பிராமணர்கள் யாதொரு கவலையுமின்றி அப்புண்ணிய முனிவரது ஆச்சிரமத்தில் பன்னிரண்டு வருடம் சுகமாக வாழ்ந்துவந்தனர். பின்பு பஞ்சம் நீங்கி நாடெல்லாஞ் செழித்தமையால் அப்பிராமணர்கள், அவ்விடம்விட்டுத் தமது உறைவிடஞ்செல்ல நினைந்து கௌதமரிடம் அனுமதிகேட்க, அவர் மேலுஞ் சிலகாலந் தமது ஆச்சிரமத்தில் சுகமாக வுண்டுவாழும்படி கூறித் தடுத்தனர். அப்போது, அப்பிராமணர்கள் தங்கள் மந்திரபலத்தால் மாயாரூபமாக வொரு கரிய பசுவை யுண்டாக்கிக் கௌதமர் சமீபத்தில் நிற்கச்செய்ய, அக்கௌதமர் அப்பசுவைப் பிடித்துக் கொண்டுவந்து தமது கோட்டத்திற் கட்டித் தொட்டமாத்திரத்தில் அதுவீழ்ந்திறந்தது. உடனே கௌதம முனிவர் கோஹத்திவந்து விட்டதேயென்று பரிதபித்து வருந்தினர். அப்போது அப்பிராமணர்கள், கௌதமரை நோக்கி,

கோவத்யேயம் த்விஜச்ரேஷ்ட யாவத்தவ சரீரகா
தாவத்தேந்நம் நபோக்தவ்யம் கச்சாமோவயமே வஹி

"பிராமண சிரேஷ்டராகிய கௌதமரே? இதுவோ பசுக்கொலையாயிற்று, உமது சரீரம் நீங்கும்வரையும் உமது அன்னம் புசிக்கற்பாலதன்று, நாங்கள் இவ்விடம் விட்டுப் போகின்றோம்." என்று கூறிவிட்டுத் தாருவனத்தை யடைந்தார்கள். அவர்கள் மாயத்தினாற் செய்ததை யறிந்து கௌதமர் சபித்தார். அதாவது.

பவிஷ்யந்தி த்ரயீபாஹ்யா மகா பாதகிபிஸ்ஸமா:
பஹூ சஸ்தேததா சாபாஜ் ஜாயமாநா: புந: புந:
சர்வே சம்ப்ராப்ய தேவேசம் சங்கரம் விஷ்ணமவ்யயம்

இவ்வாறு மாயஞ்செய்த பிராமணர்கள் மகா பாதகர்களுக்குச் சமானர்களாகி வேதபாகியர்களாகக் கடவர்களென்று சபிக்க, அப்பிராமணர்கள் அச்சாபத்தை யேற்று, மீட்டும் மீட்டும் பிறந்துழன்று வருந்தி, உருத்திரரையும், விஷ்ணுமூர்த்தியையும் அடைந்து துதித்தார்கள். அத்துதிக்கிரங்கிய ருத்திரமூர்த்தியும், விஷ்ணுமூர்த்தியும், அப்பிராமணர்கள் சாபமேற்றதற்கிணங்க அவைதிகங்களாகிய பாசுபதம், காபாலம், லாகுளம், சாக்தம், வைரவம், காளாமுகம், பாஞ்சராத்திர முதலிய அசிரவுதாகமங்களை உண்டுபண்ணிக் கொடுத்து அவ்வழி யொழுகச் செய்தார்கள். இச்சரித்திரம் கூர்மபுராணம் பூர்வபாகம் பதினாறு மத்தியாயத்தும், சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டம் முப்பத்திரண்டா மத்தியாயத்தும் விளங்குகின்றது. ஈண்டுக் கூறிய ததீசி கௌதம மகரிஷிகள் சாபமாத்திரமோ, இன்னும் திருநந்திதேவர், பிரமதேவர், துர்வாசர், பிருகுமுனிவர் கண்ணுவ முனிவர் முதலியோர் சாபங்களும் அப்பிராமணர்களுக் குள்ளன. இதனை,

சிட்டர்புகழ் கைலைமலை காத்தருளுந் திருநந்தி தேவன் செங்கேழ்
மட்டுறுபங் கயத்துறையு நான்முகத்தோன் குருவாசன் மறைநூல் யாவும்
தட்டறவே யுணர்பிருகு கௌதமன்கண் ணுவமுனிவன் றதீசி யின்னோர்
இட்டபெருஞ் சாபமெலாம் பொய்த்திடுமோ வெனவுன்னியேகலுற்றான்.

என்னுந் திருவிருத்தத்தாற் காண்க. இது, அகஸ்தியமுனிவர் விபூதி ருத்திராக்ஷ தாரணராய் சிவநாமோச் சாரணராய்த் திருக்குற்றாலத்திற் புகும்பொழுது அங்குள்ள வைஷ்ணவப் பிராமணர்கள், முனிவரது சிவவேஷத்தைக் கண்டதும் சிவநாமங்களைக் கேட்டதும் தங்களுக்குப் பாதகமென்றெண்ணி, அவரை இன்னும் பார்க்கப்படாதென்று விஷ்ணுவாலயத்தின் வழிவர வொட்டாது தடுத்தபொழுது, அதனைச் சிவாலயமாக்கத் திருவுளங் கொண்டமையால், சர்வசக்திமானாகிய பரமேசுர சமானராயிருந்தும் அத்தடைக்கு உட்பட்டவர்போலத்திரும்பிச் செல்லும்பொழுது, அவ்வைஷ்ணவர்முதலிய பிராமணர்கள் இவ்விதமான சிவநிந்தகர்களாகும்படி முன்னமே பலமகரிஷிகளாற் சாபமேற்றிருந்ததை விளக்கிக் கூறிய கந்தபுராணம் அசுரகாண்டம், திருக்குற்றாலப் படலத்தில் அ-வது திருவிருத்தம்.

ஆகவே, அப்பிராமணர்கள் சிவப்பிராமணர்களையும், சிவாகமாதிகளையும் நிந்தித்ததற்குக்காரணம், பற்பல முனிவர்சாபங்களென்னுஞ் சுருதிப்பிரமாணம் ஈண்டுக்காட்டியவாறாயிற்று. இதனைப்பார்வதி தேவியாரும்விளக்கியருளினார். அதாவது, இமோற்பர்வதத்தில், பரமசிவனைப் பர்த்தாவாக அடையும்படி பார்வதிதேவியார் தவஞ்செய்திருக்குமிடத்து, அவரது பேரன்பையாவருக்குங்காட்டியுய்விக்கத் திருவுளங் கொண்ட பரமசிவன், ஒருவிருத்த வேதியராய் விபூதிருத்திராக்ஷ தாரணியாய் அங்குவந்தருளி, அப்பரமசிவன், அக்கிரமஞ்செய்தாரையடக்கித் தண்டித்து ஆளுகின்றசர்வசக்திமான்சர்வகர்த்தா விருப்புவெறுப்பில்லாதவனென்கின்ற பதிலக்ஷணத்தைவிளக்குதற்கிடமாகிய எலும்பு, தோல், சாம்பல் முதலியவற்றையணிந்திருத்தலையும், மயானவாசமுதலியவற்றையுமெடுத்துக் காட்டி, யிகழ்ந்துகூறிய சமயம், பார்வதிதேவியார் திருவுளம் பதைத்துச் சிவசிவ என்று திருச்செவிகளைப்பொத்திக்கொண்டு, திருவாய்மலர்ந்தருளிய திருவிருத்தங்கள் பின்வருவனகாண்க.

முறைபடு சுருதி யெல்லா மொழியினு மதுவே சார்வாய்
உறுகில ராகிப் பொல்லா வொழுக்கமே கொண்டு முக்கண்
இறைவனை யிகழ்ந்து முத்தி யெய்திடா துழல முன்னாள்
மறையவர் பெற்ற சாப நின்னையு மயக்குறுதோ.

தாதையாய்த் தம்மை நல்கித்தந்தொழிற் குரிய னாகி
ஆதியாய்த் தங்கட் கின்றி யமைவுறாச் சிவனை நீங்கி
யேதிலார் பக்க மாகி யில்லொழுக் கிறந்தார் போலும்
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதெ னின்னை யானே.

(இ-ள்.) ஏனைத்தேவர்கட்கும், ஆங்காங்குப் பரத்துவங்கூறினும், அவையெல்லாம், அவர்களுடைய அந்தந்தப்புவனத்தலைமை நோக்கிக்கூறிய வுபசாரமே யென்பதை, உபக்கிரம உபசங்காராதிகளால் விளக்கி, உண்மையிதுவேயென்று முறைப்படுத்தோதுகின்றவேத வேதாந்தங்களெல்லாம், பரமசிவனொருவனே கர்த்தா, அரிப்பிரமாதிதேவர் முதலியயாவரும் அவனைவழிபட்டு அருள்பெற்றுய்ய வேண்டிய சீவர்களேயென்பதைத், தியேயவாசகமுதலிய முக்கியப் பிரமாணங்களால் எடுத்துக்காட்டியிருக்கவும், அவ்வுண்மை நெறியேதமக்குறுதிபயப்பதென மேற்கொள்ளாதவர்களாய், அத்தகைய சைவசித்தாந்தத்துக்குவேறாகிய பொல்லாதமார்க்கங்களையே மேற்கொண்டு, முக்கணுடைமையாலும் பரத்துவம் விளக்குகின்ற பரமசிவனை யிகழ்ந்து, ஒருகாலத்தும் முத்திபடையாமல், நரகவேதனைப்பட்டு உழலும்படி முற்காலத்திலே பிராமணர்கள் எல்லாரும் பெற்ற சாபம், அப்பிராமணரில் ஒருவனாகிய உன்னையும் மயக்கமாட்டாதா? அந்தமயக்கத்தாலல்லவா! இவ்விதமான சிவநிந்தனைசெய்தாய் பிராமணர்க்குரிய அதி முக்கியதெய்வம் பரமசிவனென்றும், க்ஷத்திரியர்க்கு விஷ்ணுவென்றும், வைசியர்க்குப் பிரமனென்றும், சூத்திரர்க்கு இந்திரனென்றும், வேதங்கூறுகின்ற முறைமையால், பிராமணர்களாகிய உங்களுக்குச் சிவசத்திகளாகிய தங்களைப்பிதாமாதாக்களாகத்தந்து, நீங்கள் செய்கின்றயாகாதி சகலகிருத்தியங்களுக்கும் தானே அதி முக்கிய உரிமைத்தலைவனாய், அரிப்பிரமேந்திராதிசமஸ்த தேவர்க்குமுதல்வனாய்,உங்களுக்கு இன்றியமையாத பெருஞ்சிறப் புடையவனாகிய பரமசிவனையே, பிராமணர்களாகியநீங்கள் எல்லாரும், இன்றியமையாத முழுமுதற்றலைவனாகக் கொண்டு வாழவேண்டியதே, தனக்குரிய நாயகனையன்றிக் கனவிலாகிலும் வேறெவ்விடத்தும்மனமுஞ் செல்லாத அவிபசார உத்தமதர்மபத்தினியின் செயல்போல, உங்களெல்லாருக்கும் முக்கிய உரிமையாய் இருக்கவும், அப்பரமசிவனை வழிபட்டுய்யவேண்டியதை யொழிந்து அவனில் வேறாகிய மற்றைப் பிரமவிஷ்ணு வாதியரைச் சிவனடியவரெனக்கொள்ளாது, பரம்பொருளெனக்கொண்டு, அந்தந்தத் தேவதாபக்ஷமாய், அக்கினிசாக்ஷியாக விதிப்படி தன்னைப் பாணிக்கிரகணஞ் செய்தநாயகனைக் கைவிட்டுப்பரபுருஷர்களிடத்திற்சென்று, இல்லற

நெறிதவறினவியபிசாரிகள்போன்றவர்கள், பிராமணர்களாகியநீங்களல்லவா! ஆனபடியினால், அப்பிராமணர்கள் செய்யும் வியபிசாரமுறைபோலவே, அவர்களுள் ஒருவனாகியநீயும், வந்தித்துமேற்கொள்ளவேண்டியபரமசிவனைநிந்தித்து, வியபிசாரத்தன்மையே செய்தாய். இது, உங்கள் சாதியின் சாபச்செயலாய் முடிந்ததால், உன்னை நான் வெறுப்பானேன் என்று உமையம்மையார் விரித்துவிளக்கிக் கூறிய இதனாலும், அப்பிராமணர்கள் சாபக்கிரஸ்தரென்பதுதெளிவாயது.

ஆனால், அப்பிராமணர்களில் எல்லாரும் அப்படிப்பட்டவர்களா? அநேகர்கள் சிவபக்த சிரோன்மணிகளாய், வேதசிவாகமாதி சிவசாஸ்திர பரிசீலனர்களாய், சிவப்பிராமணாதி சிவபக்தப் பிரியர்களாய், வாழுகின்றார்களே யென்றால், அவர்களெல்லாம், மேற்கூறியமுனிவர்சாபத்திலகப்படாத உத்தம சிவபக்தர்களென்க. அதனையும் அப்பார்வதி தேவியாரே பின்பு விளக்கியருளினர். அதனைப் பின்வருஞ் செய்யுளாற்காண்க.

ஆயினு மறையோர் தம்மி னருமறைமுறையே வேடந்
தூயன தாங்கி யெங்கோன் றொண்டுசெய் வோரு முண்டால்.

என்பதாம். இதன்பொருள்,

பிராமணர்களெல்லாரும் பல முனிவர் சாபமேற்றவர்களாய் இருந்தாலும், அவர்களுள்ளே அச்சாபத்திலகப்படாமல், அரிய வேதசிவாகம முறைப்படி, அதிபரிசுத்தமாகிய விபூதி ருத்திராக்ஷாதி சிவவேடமே தாங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷராதி செப தபதியானபரர்களாய், சர்வலோக நாயகராகிய பரமசிவனுக்கும், பரமசிவனடியார்களுக்கும் உரிய திருத்தொண்டுகளே செய்து வாழுகின்ற உத்தமர்களும் பலருண்டு என்பதாம். பார்வதி தேவியார் திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கின் விசேடத்தின்படி, அக்காலத்திற் போலவே இக்காலத்திலும், நாங்கள் யாவரினு முயர்ந்தசாதி யென்றெண்ணி அகங்கரித்தெழும்புகின்ற சாதி மலத்தடிப்பொரு சிறிதுமின்றி, "ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண், ஆரேனுங் காணா வரன்". என்னுந் திவ்விய சுருதியைச் சிரமேற்கொண்டவர்களாகியும், மற்றைப்பிராமணர்கள், சூரியன், கணபதி, அம்பிகை, விஷ்ணு, பரமசிவன், எல்லாரையுஞ் சமமெனக் கொண்டு ஏகாசனத்தில் வைத்துப் பூசித்தல்போலச் செய்யாமல், பரமசிவனைஉன்னதபீடத்தில் வைத்துப் பூசித்து வழிபடுகின்றவர்களாகியும், மற்றைப் பிராமணர்கள், அறுபத்துமூவர் முதலிய உண்மை நாயன்மார்களைச்

சாதியாதிகுறித்துப்பராமுகஞ்செய்து நரகத்துக்காளாதலை நோக்கி, அந்தோ இவர்கள் பாபமிருந்தவாறென்னே யென்று பரிந்து, சாதியாதிகள் சரீர நோக்கியன்றிச் சிவனடி நீழலில் இரண்டறக்கலந்த சைதன்னியங்களுக் கில்லையே யென்னும் உண்மைமேற்கொண்டு, அப்பிராமணர்களும், அவ்வுண்மைநாயன்மார்மகிமை விளங்கப்பெற்றுவழிபாடு செய்துய்யும் பொருட்டு, நாயன்மார் மகிமையைவிளக்குகின்ற உபமன்னிய, அகஸ்திய, பக்தவிலாச முதலிய, நூல்களை நித்திய பாராயணமாகச் செய்கின்றவர்களாகியும், சபைகள் முதலிய புண்ணியஸ்தானங்களிற்படித்துப்பிறர்க்கும்விளக்குகின்றவர்களாகியும், அந்தந்தத் திருநக்ஷத்திரங்கடோறும், அவ்வத்திருபூஜாராதனங்களை நியமமாகச் செய்துவருகின்றவர்களாகியும், இன்னுந்தங்கள் சாதிமேன்மைக்குரிய நல்லொழுக்கங்களெல்லாம் மேற்கொண்டவர்களாகியும் உள்ள உத்தம சிவபத்திமான் களாகியபிராமணர்கள் அநேகரிருக்கின்றார்கள். அவர்களுடைய ஸ்ரீ பாதங்களைச் சிரமேற்கொண்டு வாழ்வதே நமது கடமையென்க. இவர்கள் செய்கையை நேரேதெரிந்த பின்னாவது மற்றைப் பிராமணர்கள், சிவப்பிராமண சிவாகமாதி நிந்தனை முழுதும் நீங்கி இவர்கள் மேற்கொண்ட உண்மை நெறி கைப்பற்றி வாழ்வார்களாக.

இனிச்சிவப்பிராமணர்களிற் சிலர், தங்களுக்குநான்குபடிகீழுள்ள பிராமணர்களை உபாத்தியாயர்களாகக் கொண்டு, சிராத்தாதி சில கிரியைகளைச் செய்வதுவிதிவிரோதமெனத்தெளிந்து, தாங்கள்எல்லோரும்வேதசிவாகமாதி நூல்களை நன்குணர்ந்து, தாங்களேசெய்துகொள்ளாமற்பராமுகர்களாயிருப்பதுஎன்னதலைவிதியோ? இது அறியாமைக்குணமன்றி வேறில்லை. இதுவன்றிச், சில சிவாலயங்களிலும் அவர்களைக் கொண்டு புண்ணியாகவாசன பஞ்சகவ்வியவாஸ்துசாந்தியாதிசெய்கின்றார்கள். சிவாகம உணர்ச்சி யில்லாத அப்பிராமணர்கள் அக்கிரியைகளைச்சிவாகமவிதிப்படி செய்வார்களா? அவர்கள் சிவாலயத்தில்அத்தியயனமாத்திரையேஅன்றி எவ்விதக்கிரியையாவது செய்யலாமா? செய்யும்படி சிவாகமம் விதித்ததுண்டா? எந்தக்காரணத்தினாலாவது செய்தால் தேசத்துக்கும்ராஜனுக்கும் தீங்குவிளையுமென்று சிவாகமங்கள்கூறுகின்றனவே. சிவாகமம் விதித்தபடி பல்லவா சிவாலயக்கிரியைகள்நடக்கவேண்டும். இவைகளெல்லாம் அதிபதிகள்சீர்தூக்கிச்சிவப்பிராமணர்களெல்லாரும் வேதசிவாகமாதி சிவசாஸ்திரபோத சீலர்களாய்ச் சிரத்தையுடன் சிவாலயபூஜாதிகள் செய்துவரும்படியும் அதற்குவேண்டிய ஏற்பாடுகள்செய்து நடத்திவரும்படியும் ஸ்ரீகணேச ஸ்கந்தசகித ஸ்ரீ சாம்பபரமேசுர சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

ஆதிசைவகுலமான்மியம் முற்றிற்று.

---

ஞானம்பிகா ப்ரின்டிங் வொர்க்ஸ், காரைக்குடி.